சிந்தனை
தொகுதி V
இதழ் III, 1993

# இலங்கையில் இனவாதமும் தேசக் கட்டுமானமும்

ச. சத்தியசிலன்

தென்னாசியப் பிராந்தியத்தில் உள்ள நாடுகளின் தேசக்கட்டுமானம், தேசிய ஒருங்கிணைப்பு என்பன அரசியல் ஆய்வாளர்களிடையே முக்கிய கவனத்தைப் பெற்றுள்ளன. இப்பிராந்தியத்தில் உள்ள நாடுகள் பிரித்தானிய ஆட்சியிலிருந்து சுதந்திரம் பெற்றவைகளாகக் காணப்படுவதுடன், அரசியல், பொருளாதார, சமூக ரீதியாகப் பல பிரச்சினைகளை எதிர்நோக்கும் நாடுகளாகவும் விளங்குகின்றன. இப்பிராந்திய நாடுகளின் – தேசங்களின் தற்போதைய வடிவம் அல்லது புவியியல் எல்லைகள் மிக அண்மைக் காலத்தில் வரையறை செய்யப்பட்டனவாகவும், அண்டை நாடுகளுடன் எல்லைத் தகராறுகளைக் கொண்டவையாகவும் உள்ளன. இத்தேசங்களில் பல பிரித்தானியர் தென்னாசியப் பிரதேசத்திலிருந்து வெளியேறியதைத் தொடர்ந்து உருவாக்கப்பட்டவையாகக் காணப்படுகின்றன. பிரித்தானிய இந்தியாவிலிருந்து இந்தியாவும், பாகிஸ்தானும் பாகிஸ்தானிலிருந்து பங்களாதேசமும் உருவாகின. இலங்கை, நேபாளம், பூட்டான் ஆகிய புதிய தேசங்களும் அரசியல், பொருளாதார, சமூகப் பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளன. மொத்தத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட இத்தேசங்கள் – அரசுகள் மிக இளமையானவையாகக் காணப்படுகின்றன. மேற்கைரோப்பிய நாடுகளைப் போன்றோ, அல்லது ஐக்கிய அமெரிக்க நாடுகளைப் போன்றோ நீண்ட ஆயுள் கொண்ட தேசங்களாக இவை காணப்படவில்லை.

தென்னாசியப் பிராந்தியத்திலுள்ள நாடுகள் அனைத்தும் பல மொழி, இன, மத, கலாசாரப் பாரம்பரியங்களைக் கொண்ட மக்கட் கூட்டங்களைக் கொண்டு உருவாக்கப்பட்டவையாகக் காணப்படுகின்றன. இந்தப் பல்லினத் தன்மை இப்புதிய அரசுகளின் வளர்ச்சிக்குப் பல இடைஞ்சல்களை ஏற்படுத்தியுள்ளது. பிரித்தானியர் ஆட்சியை அகற்றுவதற்கு இம்மக்கட் தொகுதிகளில் இருந்து வளர்ச்சிபெற்ற மத்தியவகுப்பினர் தலைமையில், பொதுவான ஒற்றுமை இம் மக்கட் கூட்டங்களிடையே ஏற்படுத்தப்பட்டது. இவர்கள் சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுத்துச்சென்று வெற்றியும் பெற்றனர். பொது எதிரியை அகற்றுவதில் இம்மக்கட் கூட்டங்கள் ஒன்றிணைந்திருந்தாலும், பொது எதிரியான பிரித்தானியர் ஆட்சியை அகற்றிய பின்னர் பல முரண்பாடுகளைத் தங்களிடையே எதிர்நோக்க வேண்டியவர்களாயினர். இதற்கு இப்பகுதிகளில் வாழ்ந்த இனக்குழுக்களின் பழைய வரலாறும், பண்பாட்டம்சங்களும், பெருமளவுக்குத் துணைபுரிந்தன. பொதுப்பட இப்பிராந்தியத்தில் வாழ்ந்துவரும் பல்வேறு இன மக்கட் சமுதாயங்களும் வரலாற்றின் பல்வேறு கால கட்டங்களில் தனியான அரசுகளையும், எல்லைப் பரப்புக்களையும், இன வரலாற்றில் 'பொற்காலங்களையும்' கொண்டிருந்தன. இந்த முன்னிலை நினைவுகளை மீட்சிப்படுத்தும் விருப்பங்கள் புதிய அரசுகளில் பெரும்பான்மை இனத்தவருடன் முரண்பாடுகள் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் வலுவுள்ளவைகளாக மாற்றம் பெற்

றுள்ளன. இந்தப் பழைய நினைவுகளும், இனப்பண்புகளும், புதிய ஆட்சியாளர்களினால் புறக்கணிக்கப்படும் போக்குகளும் இந் நாடுகளின் தேசக்கட்டுமாணத்திற்கும் பெரும் அச்சுறுத்தலாக அமைந்து வருவதனை அண்மைக்காலச் சம்பவங்கள் காட்டுகின்றன.

அரசியலதிகாரம் பிரித்தானியர் கையிலிருந்து புதிதாக வடிவமைக்கப்பட்ட தேசங்களில் உள்ள பெரும்பான்மை இனத்தவர் கைகளில் சென்றதைத் தொடர்ந்து மொழி, இன, மத, கலாசாரப் பாரம்பரியம் அடிப்படையில் வேறுபட்டிருந்த சிறுபான்மை இனத்தவர் தாம் எல்லா வகைகளிலும் புறக்கணிக்கப்படுவதாகவும் அரசியலதிகாரத்தில் தமக்குரிய பங்கு அளிக்கப்படாதிருப்பதாகவும் கருதி அவற்றை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இந்நடவடிக்கைகள் பல்வேறு தரம், தன்மை, வடிவம் கொண்டனவாகக் காலப்போக்கில் வளர்ச்சியடைந்தன. சில வெற்றியும் பெற்றன. சில கடுமையாக இராணுவ பலம் மூலம் அடக்கப்பட்டன. இந்தியக் குடியரசோ வேற்றுமையில் ஒற்றுமை காண்பதைக் கவனத்திற் கொண்டு, மொழிவழித் தேசியத்தை அங்கிகரித்து, மொழிவழி மாநில அரசுகளை அமைத்துக் கொண்டது. அப்படியிருந்தும்கூட அங்கும் பிரிந்துசெல்லும் போக்கு சில பிரிவினரிடையே காணப்படுகின்றது. இந்தியாவில் மட்டுமல்ல, பாகிஸ்தானிலும், இலங்கையிலும், புதிய அரசான வங்களாதேசத்திலும் பிரிந்துசென்று தனியரசுகள் அமைக்கும் போக்கு மிக வலுப்பெற்று வருவதைக் காண்கின்றோம்.

தென்னாசியப் பிராந்தியத்தில் உள்ள தேசங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு மூலகாரணமாக அமைவது அவை தத்தம் நாடுகளில் தேசக்கட்டுமாணம், தேசிய ஒருங்கிணைப்புப் பொறுத்து மேற்கொண்ட தவறான நடவடிக்கைகளும், அணுகுமுறைகளுமேயாகும். பன்மைத் தன்மை கொண்ட, இப்புதிய நாடுகளில் தேசக்கட்டுமாணம் மிகக்கவனமாக மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும். தவறான அணுகுமுறைகளைப் பின்பற்றியதால் தேசக்கட்டுமாணத்திற்குப் பதிலாகத் தேசிய சீர்குலைவை (National Disintegration) இந்நாடுகள் எதிர்நோக்க வேண்டியுள்ளன. பெரும்பான்மை ஆட்சியாளரின் தவறான அணுகுமுறைகளினால் இனவாதம் இந்நாட்டு அரசியலில் தீவிர பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. பெரும்பான்மை ஆட்சியாளர் அரசியலதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்வதற்கும், தக்க வைப்பதற்கும் இனவாதத்தைக் கருவியாகக் கையாளப் பாதிக்கப்பட்ட சிறுபான்மையின மக்களும் வேறு வழியின்றி அதே கருவியைக் கையாண்டு நாட்டில் காத்திரமான அரசியல் வளர்ச்சி ஏற்படாமல் போகக் காலாயினர். இந்தப் போக்குத்தான் இப்புதிய அரசுகளில் தேசக்கட்டுமாணம் சிறப்பாக ஏற்படுவதற்குப் பிரதான தடையாகியது.

சுதந்திரம் கிடைத்த ஒரு தசாப்தத்திற்குள்ளேயே இப்புதிய அரசுகள் மொழி பொறுத்து மேற்கொண்ட நடவடிக்கைகள் எந்தளவிற்கு அதிகாரத்தில் இருந்தோர் தம் இனச்சார்பு நடவடிக்கைகளை மேற்கொண்டனர் என்பதற்குச் சான்றாகின்றது. இக்காலப்பகுதிக்குள் இந்தியாவில் ஹிந்திமொழியும், பாகிஸ்தானில் உருது மொழியும், இலங்கையில் சிங்கள மொழியும் அரசகரும மொழிகளாக அந்தஸ்துக் கொடுக்கப்பட்டு மற்றைய இன, மத, மொழி மக்கட் கூட்டங்களின் உணர்வுகள் புறக்கணிக்கப்பட்டன. அரசியலதிகாரத்தைக் கைப்பற்றிக்கொண்ட பெரும்பான்மை இனம் தம் மொழி, மத, இன, பொருளாதார சமூக, கலாசார நன்மைகளை முதன்மைப்படுத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டமை தேசக்கட்டுமாணத்திற்குப் பதிலாக ''தேசியப்பேரழிவையே'' (National Destroy) ஏற்படுத்தக் காலாயின. இந்த அரசகரும மொழிச் சட்டங்கள் வெறுமனே மொழியுடன் மட்டும் தொடர்புறாது அரசியல், பொருளாதார, சமூக, பண்பாட்டு அம்சங்களுடனும் பிணைந்திருந்தன. இந்த நடவடிக்கைமூலம்

இலக்கிய வளம்மிக்க வங்கமொழி, தமிழ் மொழி, ஏனைய உபகண்ட மொழிகள் பேசுவோரின் மனம் புண்படுத்தப்பட்டதுடன், தேசிய ஒருங்கிணைப்பு என்பது கருத்தற்ற ஒன்றாகவும் மாற வழிவகுத்தது.

இப்பின்னணியிலேதான் இலங்கையிலும் அரசியலதிகாரம் பெரும்பான்மைச் சிங்கள மக்களின் கைக்கு மாறியதிலிருந்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் அமைந்திருந்தன. இலங்கையில் காணப்படும் இனப் பிரச்சினையும் தேசக்கட்டுமாணத்தில் விட்ட தவறின் காரணமாகவோ உருப்பெற்றது. இலங்கையில் காணப்படும் நிலைமைகள் மூன்றாம் உலக நாடுகளில் காணப்படும் இனப் பூசல்களின் தன்மையையும், அந்நாடுகளில் தேசக் கட்டுமாணத்திற்கும், தேசிய ஒருங்கிணைப்பிற்கும் ஏற்பட்டிருக்கும் ஆபத்துக்களின் தன்மையையும் எடுத்துக் காட்டுவதற்குத் தகுந்த உதாரணமாக அமைந்துள்ளது. இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்து இன்றுவரை அதன் அரசியல் வளர்ச்சியில் இனவாதமானது முக்கிய பங்கினை வகித்து வருவதுடன், அதன் வளர்ச்சிப்போக்கின் மைய நிலையாகவும் செயற்பட்டுவருகின்றது. இன்று நாடு எதிர்நோக்கியிருக்கும் மோசமான நிலைமைக்கும் இந்த இனவாத அரசியலே காரணமாகும்.

இச்சிக்கலான பிரச்சினையை விளங்கிக்கொள்வதற்கு இனவாதம் என்பதன் அர்த்தத்தைப் புரிந்துகொள்வது அவசியமானதாகும். பேராசிரியர் ஆர். என் கேர்ணியின் (R. N. Kearney) கருத்துப்படி இனவாதம் ஒரு மனப்பாங்கினைக் குறிக்கும். இந்த மனப்பாங்கு அந்த இனக்குழுவின் முதன்மையையும், பிரத்தியேகத் தன்மையையும் வலியுறுத்துகின்றது. அத்துடன் அரசியல், சமூக நடவடிக்கைகளில் இக்குழுவைச் சேர்ந்தவர்கள் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் என்பதையும் வலியுறுத்துகின்றது.[1] டீ. ஈ. சிமித் (D. E. Smith) என்ற இன்னோர் அறிஞர் இனவாதமானது ஒரு சமுதாயத்திலே ஒரு தனி அல்லது பெரும்பான்மைக் குழு தனது பொருளாதார, அரசியல் பலத்தை உச்ச அளவில் பயன்படுத்தி ஏனைய குழுக்களை வழக்கமாகச் சிறுபான்மையினரின் நலன்களைப் பாதிக்கும் வகையில் நடந்து கொள்வதாகும் என்று வரைவிலக்கணம் கொடுக்கின்றார்.[2] தென்னாசிய நாடுகளில் 'சமூகம்' (Community) என்ற பதமானது தனித்துவமான மொழி, மத, சமூக நிறுவன, பாரம்பரிய மூதாதையரைக் கொண்ட, தனியான குழுவாக, பொது அடையாளத்தையும், பொது உணர்வுகளையும் கொண்ட மக்களைக் குறிப்பிடுகின்றது. இந்தியாவிலே Community, Communalism இரண்டும் மத அடிப்படையிலே இந்து – முஸ்லீம் மக்கட் பிரிவினரைக் குறிப்பிடும் பதப்பிரயோகமாகப் பெருமளவு காணப்படுகின்றது. ஆனால் இலங்கையிலோ இனப் பிரிவினரை (Ethnic Group) அதாவது சிங்களவர், தமிழர், முஸ்லீம்களைக் குறிக்கும் பதமாகவே அமைந்துள்ளது. இலங்கை அரசியலில் வேற்றுமைக்கும், குழப்பத்திற்கும் முக்கிய காரணியாகவும், ஒன்றிணையும் போக்குகளுக்கும் மிகப் பெரும் முட்டுக்கட்டையாகவும் இருந்தது என்னவென்றால் பொதுவாகச் சமூகங்களுடன் இனங்காணுதலும், அதனுடன் இணைவதுமான உணர்வுகளே. இந்தச் சமுதாயங்கள் பரந்த முதன்மைத் நேர்வுக் குழுக்களாகும்.[3] (Broader Primordial Groups)

இலங்கையில் தேசக் கட்டுமாணம், தேசிய ஒருங்கிணைப்புப் பற்றி விளங்கிக் கொள்வதற்கு அரசியல் ஒருங்கிணைப்புப் பற்றிய கோட்பாடுகள் கூடிய பொருத்தப்பாடுள்ளவையாகும். மைரன் வெய்னர் (Myron Weiner) எனும் அறிஞர் அரசியல் ஒருங்கிணைப்பு என்பதனை 5 வகையாகப் பிரித்து ஆராய்ந்துள்ளார்.

1) தேசிய ஒருங்கிணைப்பு – Nationa Integration.
2) பிரதேசவாரி ஒருங்கிணைப்பு – Territorial Integration.
3) உயர்குழாம் – வெகுஜன ஒருங்கிணைப்பு – Elite - mass Integration.

4) விழுமிய ஒருங்கிணைப்பு - Value Integration.

5) ஒருங்கிணைப்புக்கான நடத்தைகள் Integrative behaviour.

தேசிய ஒருங்கிணைப்பு என்பது ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் வாழும் சமுதாய ரீதியிலும், பண்பாட்டு ரீதியிலும் வேறுபட்ட குழுக்களை ஒருங்கிணைத்துக் குறுகிய விசுவாசகங்களைத் தாண்டிய தேசிய அடையாளத்தைத் திட்டமிட்டு வளர்த்தலேயாகும்.[4]

பிரதேசவாரி ஒருங்கிணைப்பு என்பது நாட்டைப் (Nation) பற்றிய வரலாற்று, சமூக ரீதியாக வெவ்வேறான குழுக்களைச் சார்ந்த தனிநபர்களின் உணர்வுகள் சம்பந்தப்பட்டது. அதாவது கீழ்நிலையில் உள்ள அரசியல் அல்லது பிரதேச அலகுகள்மீது தேசிய மத்திய அதிகாரத்தை நிலைநிறுத்தும் பிரச்சினை.[5]

உயர்குழாம்-வெகுஜன ஒருங்கிணைப்பு என்பது ஆள்பவரையும், ஆளப்படுபவரையும் தொடர்புபடுத்தும் பிரச்சினையாகும். உயர்குழாம் மேல்நிலையிலும் வெகுஜனங்கள் அடித்தளத்திலும் காணப்படுவர். இவற்றுக்கிடையில் விழுமியங்கள், அபிலாசைகள், பொறுத்தவரை குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் உள்ளன. இவற்றுக்கிடையில் ஒருங்கிணைப்பு எப்பொழுது நிகழ்கின்றதென்றால் இரு சாராருக்கும் இடையில் உள்ள வேறுபாடு மறையும்போதல்ல; அதிகாரமும், உடன்பாடும் கொண்ட ஒரு அமைப்பை நிறுவும்போதாகும்.

விழுமிய ஒருங்கிணைப்பு எனும்போது ஒரு சமூக அமைப்பைப் பேணுவதற்குத் தேவையான மிகக் குறைந்த விழுமிய உடன்பாட்டைக் குறிக்கின்றது. இதில் குறிக்கோள்களை எய்துவதற்கும், பிணக்குகளைத் தீர்ப்பதற்குமான வழிவகைகள், சம்பந்தப்பட்ட எண்ணங்கள் தொடர்பு கொண்டிருக்கும்.

ஒருங்கிணைப்புக்கான நடத்தை என்பது சில பொது நோக்கங்களுக்காக ஒரு சமுதாயத்தில் வாழும் மக்கள் தம்மை ஒழுங்குபடுத்துவதற்கான வல்லமை சார்ந்தது. சில சமுதாயங்களில் இந்த வல்லமை கிட்டத்தட்ட உயர்குழாத்தின் ஏகபோகமாக இருக்கின்றது. வேறு சில சமுதாயங்களில் வெவ்வேறு மட்டங்களில் மக்களே இத்தகைய வல்லமையைப் பெற்றிருக்கின்றனர்.

அரசியல் ஒருங்கிணைப்பின் இந்த ஐந்து அம்சங்களுந்தான் ஒரு சமுதாயத்தையும், அரசியல் அமைப்மையும் பிணைத்து நிற்கின்றது என வெய்னர் கருதுகின்றார். வெய்னர் அரசியல் ஒருங்கிணைப்புக் குறித்து வகைப்படுத்திய ஐந்துவகையான மாதிரிகளும் இலங்கையின் இனவாதமும், தேசக்கட்டுமாணமும் பற்றி ஆராயும்போது பயன்படுத்தக்கூடியவையே. வெய்னர் குறிப்பிட்ட இந்த அம்சங்கள் இலங்கையில் தேசக்கட்டுமாணம் பொறுத்து எந்தளவுக்குக் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டன என்பதும், இனவாதமானது எத்தகைய பங்களிப்பினைச் செய்தது என்பதும் இங்கு அவதானிக்க வேண்டியவைகளாகும். இவ்வகையில் இலங்கையில் தேசக்கட்டுமாணம், தேசிய ஒருங்கிணைப்பு, இனவாதம் ஆகியவற்றுக்கு இடையே முரண்படும் வகையில் நெருங்கிய தொடர்பு இருப்பதனை அறியமுடியும்.

இலங்கையில் தேசிய ஒருங்கிணைப்பிற்கு மக்கள் தம்மை மொழி, மத, இன அடிப்படையில் நெருங்கிய வகையிலே அடையாளம் காண்பது பெரும் தடையாக அமைந்துள்ளது. மேற்குறிப்பிட்ட தனிமுதன்மைவாய்ந்த (Premordial) அடையாளங்களுடன் தம்மை ஐக்கியப்படுத்திக் கொள்வது தேசக்கட்டுமாணத்திற்கும் தடையாக அமைந்துள்ளது. அத்துடன் சிங்கள மொழியிலே 'ஜாதிய' எனக் குறிப்பிடப்படும் பதமானது இந்தியாவில் போல் சமூகப் பிரிவைக் (Caste - சாதி) குறிக்காது சிங்கள இனத்தைக் குறிக்கும் பதமாகவே கொள்ளப்படுகின்றது. இந்நிலைமையானது சிங்

ளமொழி, பௌத்தமதம் கலந்த சிங்கள இனவாதத்தை வலுப்படுத்த உதவிய அம்சமாகக் காணப்படுகின்றது. இதனை மையமாக வைத்து எழுச்சியுற்ற சிங்கள பௌத்த பேரினவாதமானது (Chauvinism) தேசிய ஒருங்கிணைப்பிற்கு மாறான சக்தியாகவும் செயற்பட்டுள்ளது. சிறப்பாகத் தமிழ் மக்களிடையே சந்தேகத்தையும், அச்சத்தையும் சிங்கள மக்கள் பொறுத்து ஏற்படுத்தியதுடன், எதிர்விளைவாகச் சிங்கள மக்களையும் தமிழர் பொறுத்து ஐயுறவு கொள்வதற்கு வழி அமைத்தது. தேசிய ஒருங்கிணைப்புப் பற்றி வெய்னர் குறிப்பிட்ட கலாசார சமூக, அடிப்படையில் வேறுபாடு கொண்ட சமூகப் பிரிவினரை ஒன்றிணைக்கும் செயற்பாட்டையும், தேசிய அடையாளம் (National Identity) ஒன்றை ஏற்படுத்துவதையும் மறுதலிக்கும் நடவடிக்கையாகவே இப்பேரினவாத நடவடிக்கைகள் அமைந்தன. அத்துடன் சிங்கள பேரினவாதத்தின் முக்கிய அம்சமாக இலங்கைத் தேசியத்தைச் சிங்கள இனத்துடனும், அநேகமாகச் சிங்களவருள்ளும் பௌத்த நம்பிக்கை கொண்டோருடன் சமப்படுத்துவதும் (Equating) காணப்பட்டது.[6] இந்நடவடிக்கைகளினால் பொதுநோக்கத்திற்காகச் சிங்கள, தமிழ் மக்கள் ஒன்றிணைந்து இயங்குவதும், தேசிய ஒருங்கிணைப்பிற்கான நடத்தையில் ஈடுபடுவதும் பெருங் கஷ்டத்திற்குள்ளாக்கப்பட்டதென்று ஜேம்ஸ் மனர் (James Manor) தெளிவாக எடுத்துக் காட்டுகின்றார்.[7]

இனவாதத்தின் ஒரு வடிவமாகிய சிங்கள பௌத்த பேரினவாதம் சிங்கள மக்களிடையே ஒருங்கிணைப்புச் சக்தியாகவும் செயற்பட்டுள்ளது. ஆள்வோர், ஆளப்படுவோர் இடையிலும், உயர்குழாம் – வெகுஜனங்கள் இடையில் ஒருங்கிணைப்பை மேம்படுத்தலிலும், உயர்குழாத்தின் அதிகாரத்தை வெகுஜனங்கள் ஏற்றுக்கொள்ளும் வகையிலும் பேரினவாதம் செயற்பட்டுள்ளது. சிங்கள, பௌத்த பேரினவாதத்தை 'தேசியத் தலைவர்' கள் என்றும் கூறிக் கொண்டோர் கையாண்டதன் விளைவாக ஆளப்படுவோரில் ஒரு பகுதியினரான தமிழ் மக்கள் நாட்டின் அரசியல், பொருளாதார வாழ்விலிருந்து அந்நியப்படுத்தப்பட்ட நிலைமையை இங்கே காண்கின்றோம். இந்நடவடிக்கைகள் சிங்களத் தலைவர்கள் தங்கள் அரசியற் கட்சியிலும், அரசாங்க அமைப்புக்களிலும் பெற்றிருந்த பதவிகளை வலுப்படுத்துவதற்கும், சிங்கள மக்களிடையே 'கதாநாயகர்' களாக வருவதற்கும் உதவின. அதேநேரம் சிங்கள மக்களிடையே காணப்பட்ட வேறுபாடுகளை நீக்கவும் அவை உதவியுள்ளன. கண்டிச் சிங்களவர், கரையோரச் சிங்களவர், ஏழைகள் செல்வந்தர், நகரவாசிகள், கிராமவாசிகள், சாதி அடிப்படையிலான பிரிவுகள் இவற்றை மேவித் தலைவர்கள் உருவாகுவதற்கும் வழியமைத்தது. சிங்கள அரசியல்வாதிகள் இப்பேரினவாதத்தைக் கையாண்டதன் மூலம் இலங்கையின் பெரும்பான்மை மக்களிடையே ஒரு மாதிரி அதிகாரத்தையும், இசைவையும் (A pattern of Authority and Concent) ஏற்படுத்துவதற்கும், பேணுவதற்கும் உதவியுள்ளது.

இலங்கையின் அரசியல் ஒருங்கிணைப்பிற்கு ஒருவகையில் சிங்கள பௌத்த பேரினவாதம் பதிலியாகவும், மாற்றுத் திட்டமாகவும் (Substitute and Alternative) செயற்பட்டு 'வந்துள்ளமையை அவதானிக்கலாம். பெரும்பான்மையான சிங்களத் தலைவர்களினாலும், அரசியல் அமைப்புக்களினாலும் கருத்தளவிலான உயர்குழாம் – வெகுஜனங்கள் இடையிலான ஒருங்கிணைப்பு சிங்கள பௌத்த பேரினவாதத்தின் மூலம் மேம்படுத்துவது ஆதரிககப்பட்டது. ஆனால் இலங்கையின் முன்னணி அரசியல்வாதிகள் சிறிய தேசிய உயர்குழாத்தினைக் கடந்து கீழ் உள்ள மக்களுக்கு அதிகாரப் போட்டியில் குறிப்பிடத்தக்க பங்கு பெறுவதற்கான வாய்ப்புக்களை அளிக்காமல் விட்டமை தவறாயிற்று. இலங்கையில் பதவிக்கு வந்த அனைத்து அரசாங்கங்களுமே அதிகாரத்தை மத்தியமயப்படுத்தலில் அதிக அக்கறை கொண்டிருந்தன. அதனால் இலங்கையின் பிரதான அரசியற் கட்சிகளாகிய ஐக்கிய

தேசியக் கட்சியினதும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினதும் நாடு தழுவிய அமைப்புக்கள் அதிகாரத்தில் பங்கு பெறுவதில் தொடர்ந்தும் ஒதுக்கப்பட்டே வந்துள்ளன. அரசியல் தலைவர்கள் அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதை மறுத்ததுடன் குறிப்பிடத்தக்க அளவிலான அரசியல் ஆதாயங்களைக் (Political Spoils) கூடத் தம் கட்சிக்குள்ளே கீழ் மட்டத்தில் இருந்தவர்களோடு பங்கிடுவதனையும் எதிர்த்து வந்தனர். இதன் விளைவாக நாடுபூராவும் காணப்பட்ட உள்ளூர் அதிகார மையங்களில் செல்வாக்குடனும், அபிலாஷைகளுடனும் இருந்தவர்களுடன் பலம்மிக்க இரு தரப்பு உறவினை வலுப்படுத்தலில் தோல்விகண்டனர். அரசியல் தலைவர்களும், உயர்குழாத்தினரும் அதிகாரத்தைப் பகிர்ந்தளிப்பதில் காட்டிய உலோபத் தன்மைத் தேசிய ஒருங்கிணைப்பிற்குத் தடையாக அமைந்தது.[8] வெய்னரின் வார்த்தைகளில் 'சமுதாயத்தையும், அரசியலமைப்பையும் ஒன்றிணைத்து வைத்திருப்பது' என்ற கருத்து இலங்கை அரசியல் தலைவர்களின் நடவடிக்கையினால் தோல்விகண்டது. ஆனால் ஏறத்தாள ஐம்பது வருடங்களாகச் சிங்கள மக்களிடையே ஆளும்வாருக்கும், ஆளப்படுவோருக்கும் இடையிலான தொடர்பும், உயர்குழாம் - வெகுஜனங்கள் இடையிலான இடைவெளியை நிரப்பும் நடவடிக்கையும் இன்னோர் பதிலியினால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பெரும்பான்மைச் சிங்கள மக்கள் மத்தியில் தம் அதிகாரத்தைப் பலப்படுத்தும், கொண்டு நடாத்தும் அந்தப் பதிலியாக விளங்கியது இனவாதத்தின் ஒரு வடிவமாகிய சிங்கள பௌத்த பேரினவாதமே யாகும்.[9] இந்நிலைமையுடன் வெய்னர் உயர்குழாம் – வெகுஜன ஒருங்கிணைப்புப் பற்றிக் குறிப்பிட்டிருந்த கருத்துக்கள் ஒத்துப்போவதனை அவதானிக்கலாம்.

தேசிய ஒருங்கிணைப்பு என்ற எண்ணக்கரு முழுமையானதாக இருக்கும் அதேசமயம் பல் பரிமாணங்களைக் கொண்டதாகவும் அமைகின்றது. (Holistic & Multi – dimensional) சமுதாயம், பண்பாடு பொருளாதாரம், அரசு, நிர்வாகம் ஏன் கல்வியையும்கூட இது கருத்திற் கொள்வதால் அது முழுமையான ஓர் எண்ணக் கருவாகும். பண்பாட்டு, அரசியல், நிர்வாக, பொருளாதார, உணர்வு ரீதியில் ஒருங்கிணைப்பையும் அது சுட்டுவதால் அது பல பரிமாணங்களைக் கொண்டதுமாகும்.[10]

பேராசிரியர் இக்பால் நராயண் (Iqbal Narain) தேசிய ஒருங்கிணைப்புப் பற்றி மேலும் குறிப்பிடுகையில் கலாசார - குழுவினர் (Culture - Group) இடையிலான ஒருங்கிணைப்பு, உயர்குழாம் - வெகுஜனங்கள் இடையிலான ஒருங்கிணைப்பு, உபதேசிய - தேசிய அடையாளங்களுக்கு இடையிலான ஒருங்கிணைப்பு பிரதேசவாதம், ஜனநாயகம் பற்றிப் பேசும்போது கூடிய கவனத்தைப் பெறுகின்றன என்கிறார். இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் போன்ற தென்னாசிய நாடுகளில் பிரதேசவாதக் கோரிக்கைகள் தேசிய ஒருங்கிணைப்புக்கும், ஜனநாயகத்திற்கும் எதிரான தன்மை கொண்டன என்ற கருத்துக் காணப்படுகின்றது. இந் நாடுகளில் காணப்படும் மொழிவாரி மக்கட் சமுதாயம் தம் தனித்துவத்தைப் பேணுவதற்கு ஆவலாக இருப்பதிலும், அதனை நடைமுறைப்படுத்த விரும்புவதிலும் பெரும்பான்மைச் சமுகத்தினர் தவறு காண்பது பிழையானதாகும். இலங்கையிலும் தமிழ் மக்கள் தம் மொழி, இன அடிப்படையிலான தனித்துவத்தைப் பேணுவதிலும், தம் உள் விவகாரங்களைத் தாமே கவனிக்க விரும்பியதிலும், அதனை நடைமுறைப்படுத்தும் வகையில் ஐக்கிய இலங்கையுள் தாம் பெரும்பான்மையாக வாழும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சமஷ்டி அமைப்பொன்றை ஏற்படுத்த முன்னின்றதிலும் பிழைகாணமுடியாது. உலகெங்கணுமே பல்லின, பன்மொழி பேசும் சமுதாயங்களைக் கொண்ட நாடுகளில் இச் சமஷ்டி அமைப்பு முறைமை தனித்துவத்துடனும், தன்னாட்சி அதிகாரத்துடனும், கௌரவத்துடனும் இச்சமுதாயங்கள் வாழ வகுத்துள்ளன. ஆனால் இது தொடர்பாகச் சிங்கள அரசியல் வாதிகளும், உயர்

குழாத்தினரும் தம் அரசியல் இலாபம் கருதி சிங்களப் பொதுமக்கள் முன்வைத்த தவறான பிரசாரம் இலங்கை அரசியலில் இனவாதம் செல்வாக்குப் பெற்ற காரணியாக இயங்க வழிவகுத்தது.

அதிகாரப் பரிமாற்றம் இடம்பெற்று ஐந்து தசாப்தங்கள் நெருங்கி வரும் தறுவாயிலும் தென்னாசியப் பிராந்திய நாடுகள் இன்றுவரை தேசக்கட்டுமாணம் பற்றியே பேசிவருகின்றன. பிரித்தானியரால் இங்கு ஏற்படுத்தப்பட்ட தேசிய அரசு (Nation - State) என்ற கருத்து இவர்கள் பொறுத்துப் புதிதாகவே கருதப்பட்டது. இத்தேசிய அரசுகள் இன அடிப்படையிலான தன்மையையோ, இயற்கை எல்லைகளையோ கருதாது, பிரித்தானியர் தம் வசதிக்கேற்ப ஏற்படுத்தியனவாகவே காணப்பட்டன. ஐரோப்பியர் வருகைக்கு முன்பாக இப்பிரதேசத்தில் வாழ்ந்த மக்கள் தத்தம் மொழி, இன, மத, கலாசார அடிப்படையிலான நீண்டகால வரலாற்றையும், தனித்துவமான அரசுகளையும் கொண்டிருந்தனர். இதனால் பிரித்தானியர் சென்ற பின்பாக இப்பிரதேசங்களில் அமைக்கப்பட்ட தேசிய அரசுகளிலே தேசக்கட்டுமாணம் என்பது பல பிரச்சினைகளை எதிர் நோக்கியதாகக் காணப்பட்டது. வேற்றுமையில் ஒற்றுமை காணவேண்டியது தேசக்கட்டுமாணம் பொறுத்து அத்தியாவசியமாயிற்று. இதிலே விட்ட பெரும் தவறுகள்தான் இப்பிராந்தியத்தில் தனிநாடு கோரிப் போராட்டங்கள் இடம்பெறுவதற்கு வழிவகுத்தன. தென்னாசியப் பிராந்தியத்தில் உள்ள ஏனைய நாடுகளைப் போலவே இலங்கையும் தேசக்கட்டுமாணம் பொறுத்துப்பல பிரச்சினைகளை எதிர்நோக்கவேண்டியதாயிற்று. இப்பிரச்சினைகளின் அடிப்படை அம்சமாக இனவாதம் செயற்பட்டிருப்பதனை இங்கு அவதானிக்கலாம்.

தேசக்கட்டுமாணம் பற்றி மேலும் விளங்கிக் கொள்வதற்குத் தேசிய ஒருங்கிணைப்புப் பற்றிய மற்றொரு விளக்கத்தை பெறுவது பயனுடையதாகும். தேசிய ஒருங்கிணைப்பு என்பது சமூகத்தில் வாழும் உறுப்பினர்களை ஒன்றிணைக்கும் தன்மையைச் சுட்டும். இது பொதுவாக விழுமியங்கள், நிறுவனங்கள், உயர்ந்து செல்லும் சமூகத் தொடர்பு, ஒத்துழைப்பு, உடன்பாடு ஆகியவற்றை எளிமைப்படுத்தும் தொடர்பாடல் முறைகளையும் குறிக்கும்.[11]

பேராசிரியர் ஆர்தர் ரூபினோவ் (Prof. Arthur Rubinoff) நிறுவன ரீதியான ஒழுங்குபாடுகள் அச்சமுதாயத்தைச் சார்ந்தவர்களிடையே உரையாடலையும், தொடர்புகளையும் ஊக்குவிப்பதுடன் அரசியல், மற்றும் அரசாங்கத் தலைவர்கள் கவனமாக நடந்து கொள்வதையும் உறுதிப்படுத்த வேண்டும் என்கிறார். முரண்பட்ட நலவுரிமைகளுக்கிடையே ஓர் இணக்கத்தைக் காண்பதற்கான வழிவகைகளை எளிதாக்கல் – இவ்வகையில் பல்லின மக்களிடையே தேசிய ஒருமைப்பாட்டை உருவாக்குவதுடன் அரசியல் ரீதியாகவும் திறமையாகச் செயற்படக்கூடிய வாய்ப்பினை ஏற்படுத்தும் என்று குறிப்பிடுகின்றார்[12] இங்கு சுட்டிக் காட்டப்பட்ட கருத்துக்கள் இலங்கையில் தேசக்கட்டுமாணம் பொறுத்துக் கவனத்தில் எடுக்கவேண்டியவையாகும்.

சமூக நீதியற்ற தேசிய ஒருமைப்பாடு நிலைக்காது என்பதனை வரலாறு நிரூபிக்கின்றது. ஏனெனில் அநீதியான சமூக அமைப்பில் தனிப்பட்டவர்களோ, குழுக்களோ, வர்க்கங்களோ அதனுடன் ஒரு பற்றுணர்வைக் கொள்ளக் கூடியதாக இருப்பதில்லை. சமூகநீதி இல்லாத விடத்து தேசிய ஒருமைப்பாடு உடன்பாட்டின் அடிப்படையில் அல்லாது பலாத்காரத்தின் மூலமும், ஒடுக்கு முறையின் மூலமுமே பேணப்படமுடியும். சமூக நீதியற்ற தேசிய ஒருங்கிணைப்பு என்ற எண்ணக்கரு வெறும் அதிகாரத்தையும், பலத்தையுமே குறிக்கும். இடைநிலை அரசியல் அலகுகள் அல்லது ஆட்சிமீது தேசிய மத்திய அதிகாரத்துவத்தை (National Central Authority) நிறுவுவது தனித்துவமான கலாசார அல்லது சமூகக் குழுக்களை இணைத்துச் செல்

வதாகவும் இருக்கலாம். புறக்கணித்துச் செல்வதாகவும் இருக்கலாம்.[14] இவ்வகையிலான தேசக்கட்டுமாணம் இலங்கை பொறுத்து நன்மை, தீமை இரண்டிற்குமே வழிவகுக்கும். இலங்கையில் சிறுபான்மைத் தமிழ் மக்களின் தனித்துவத்தைப் புறக்கணித்துத் தேசக்கட்டுமாணத்தை தேசிய மத்திய அதிகாரத்தின் மூலம் ஏற்படுத்தும் நடவடிக்கையுடன் இதனை ஒரளவிற்கு ஒப்பிடலாம்

பல்லின மக்களை ஒருங்கிணைப்பதே தேசக்கட்டுமாணத்தின் முக்கிய பணிகளுள் ஒன்றாக இப்போது கருதப்படுகின்றது. தேசிய ஒருங்கிணைப்பு என்பது ரேலிருந்து திணிக்கப்படும் ஒன்றல்ல. அடியிலிருந்து படிப்படியாகச் செயற்பட்ட நிகழ்வுத் தொடரே ஆகும்.[15]

காலனித்துவ ஆட்சியிலிருந்து சுதந்திரம் பெற்ற நாடுகளில் தேசக்கட்டுமாணம் என்பது தேசிய ஒருங்கிணைப்பு என்று தவறுதலாகக் கருதப்பட்டுள்ளது. இதன் விளைவாகப் பல்லின மக்கள் வாழும் ஒரு சமுதாயத்திலே பெரும்பான்மையினர் பலாத்காரமாக, ஒத்ததன்மையை அதாவது மொழிசார்ந்தோ, மதச்சார்ந்தோ, அரசியல் சார்ந்தோ மற்றவர்கள் மீது திணிப்பதற்கான உரிமையாக இது கொள்ளப்படுகின்றது. இதன் விளைவாகப் பெரும்பான்மையினரிடம் போர்க் கோலம்மிக்க தேசியவாதம் வளர்ச்சியடைந்துள்ளது. இதுஇனத்துவேஷம் சார்ந்ததாகவோ அல்லது உள்நாட்டுக் காலனித்துவமாகக்கூட மாறக்கூடிய தன்மை கொண்டதாக இருக்கலாம்.[16] இலங்கையில் காணப்படும் நிலைமை இதற்குத் தகுந்த உதாரணமாக அமைவதனைக் காட்டலாம். தென்னாசிய நாடுகள் பலவற்றில் இப்போக்கு வலுப்பெற்றிருப்பதனை அவதானிக்க முடிகின்றது.

அண்மைக்காலமாகத் தேசக்கட்டுமாணம், தேசிய ஒருங்கிணைப்பு பொறுத்து அரசை மையமாகக் கொண்ட தேசிய உணர்வை (State Centred National Consiousness) வளர்த்தெடுப்பது முக்கியத்துவம் பெற்றுவருகின்றது. புதிதாகத் தோற்றம் பெற்ற பன்மைச் சமூகங்களைக் கொண்ட அரசுகளில் இம்மாதிரியான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது பிரச்சினைகள் எழுகின்றன. இந்த நாடுகளில் மேலாதிக்கம் பெறாத சமூகங்களைப் பொறுத்த வரையில் நாட்டு எல்லைகளைக் கடந்த உறவுகளை இவர்கள் சில வேளைகளில் முதன்மைப் படுத்தியுள்ளனர். இதன் மூலம் தமது குழுப் பிணைப்பு, தயார்படுத்தல், ஆதரவு போன்றவற்றைப் பெறலாம் என இவர்கள் கருதுகின்றனர். அயல் தன்மைகளும் (Neighbourhood) தேசத்தன்மைக்கும் இடையிலான முரண்பாடு இலங்கைவாழ் தமிழரைப் பொறுத்த வரையும், பாகிஸ்தானின் 'பாதன்' (Patharns) மக்களைப் பொறுத்தும் மிகக் கூர்மையாகி உள்ளன. பகைமை உணர்வு கொண்ட ஒரு அயல் நாடு உள்ளதாகக் கருதப்படுவது அரசை மையமாக வைத்துத் தேசக்கட்டுமாணப் பணி நடைபெறுவதனை மேலும் சிக்கலுக்குள் தள்ளிவிடுகின்றது. குறிப்பாக அரசமட்டத்தில் இவர்கள் சிறுபான்மையினராக இருந்தாலும் குறிப்பிட்ட ஒரு பிரதேசதனைதப் பொறுத்தவரை (எண்ணிக்கை அடிப்படையில்) பெரும்பான்மையினராக இவர்கள் உள்ளனர்.[17] இலங்கையில் சிங்களவர் மத்தியில் காணப்படும் அச்ச உணர்வு இதற்கு தக்க உதாரணமாகும். (Majority People with Minority Complex) இலங்கையில் அரசை மையமாகக்கொண்ட தேசிய ஒருங்கிணைப்பைச் சிங்களப் பெரும்பான்மையினம் ஏற்படுத்தி (State Centric Nation) அதன் மூலம் சிங்கள மொழிக்கும், பௌத்த மதத்திற்கும், சிங்கள பௌத்த கலாசாரத்திற்கும் தனிமுதன்மை கொடுத்தனர். இந்த நடவடிக்கை சிறுபான்மை இனத்தவரைப் பொறுத்துச் சிங்கள அரசை மையமாகக் கொண்டதாகப் பார்க்கப்பட்டு எதிர்ப்புக் காட்டப்பட்டது. தமிழரால் தமது சமுதாயத்தின் மொழி, இன, கலாசாரப் பண்புகள் புறக்கணிக்கப்பட்டுப் பெரும்பான்மையினரின் சர்வாதிகார ஆட்சி (Tyrany of Majority - Ethnic Centric

Nation) ஏற்படுத்தப்பட்டதாகக் கருதப்பட்டது.[16] இந்தப் போக்கு உண்மையான தேசக்கட்டுமாணமாக அல்லாது பெரும்பான்மைச் சமூகத்தின் சர்வாதிகாரமாகவே கருதப்படவேண்டியதாகும்.

பன்மைச் சமூகங்களைக் கொண்ட ஒரு நாட்டிலே தேசக்கட்டுமாணமானது முரண்பாடற்ற வகையிலும், சமத்துவமான வகையிலும், வேற்றுமையில் ஒற்றுமை காணும் வகையிலும் கட்டி எழுப்பப்படல் வேண்டும். பல்லின, பன்மொழி கொண்ட இந்தியாவைக் காட்டிலும் பிரதானமாக இருமொழி பேசுவோரைக் கொண்ட இலங்கையில் தேசக்கட்டுமாணத்தையும், தேசிய ஒருங்கிணைப்பையும் ஏற்படுத்துதல் இலகுவானதாகும். சம அந்தஸ்து, சமூக நீதி, மதச்சார்பின்மை, தன்னாட்சியதிகாரம், கூட்டாட்சிமுறை, பொருளாதார அபிவிருத்தி, கல்வி அபிவிருத்தி என்பவற்றின் மூலம் இலங்கைவாழ் மக்கள் அனைவரும் இத்தீவின் சமத்துவமான குடிமக்கள் என்ற உணர்வை ஏற்படுத்தித் தேசக்கட்டுமாணத்தை ஏற்படுத்துதல் அவசியமானதாகும். இதனை அடைவதற்கான வழிகளாக அகிம்சை வழியிலான அரசியற் போராட்டம், ஜனநாயக ரீதியான பொதுமக்கள் பங்களிப்பு, வேற்றுமையில் ஒற்றுமை காணும் பண்பு ஆகியன கொள்ளப்படுதல் சிறப்பானதாகும். தேசக்கட்டுமாணத்தையும், தேசிய ஒருங்கிணைப்பையும் பெரும்பான்மை மக்களுடன் சிறுபான்மையினர் ஒன்றிணைதல் (Assimilation) என்றல்லாது இருபான்மையினருக்கும் பொதுவான தேசிய அடையாளத்தை வளர்த்தெடுப்பதிலும், வேற்றுமையில் ஒற்றுமை காண்பதிலும், அவரவர் தனித்துவத்தை ஏற்று, மதித்து நடப்பதன் மூலமும் ஏற்படுத்த முடியும். அரசியல் ஜனநாயகம், வறுமை ஒழிப்பு - பொருளாதார அபிவிருத்தி, வளங்களைச் சமமாகப் பங்கிடுதல், சமத்துவம், சமூகநீதி என்பன மூலம் இவ்விரண்டினையும் ஏற்படுத்தமுடியும்.[19] உண்மையான தேசியக் கல்வி முறையொன்றினை ஏற்படுத்தி தேசக்கட்டுமாணத்தையும், தேசிய ஒருங்கிணைப்பையும் உருவாக்கி வலுப்படுத்த முடியும்.

இலங்கையில் நவினமயமாக்கலும் (Modernization) அதனுடன் இணைந்த சமூக, அரசியல் அசைவாக்கங்களும் (Social, Political Mobilization) இனவாதமானது வலுமிக்க சக்தியாக வளர்ச்சியடைவதற்கும், அரசியல், பொருளாதார, சமூகத் துறைகளிலே பாரிய தாக்கங்களை ஏற்படுத்துவதற்கும் வழிவகுத்தன. நவினமயமாக்கம் என்ற பதமானது ஆசியாவிலும், உலகின் பிற பாகங்களிலும் சமூக, பொருளாதார, அரசியல், உளவியல் ரீதியாக ஏற்பட்ட மாற்றங்களைக் குறிப்பதற்குப் பயன்படுத்தும் ஒன்றாகக் கருதப்படுகின்றது. அத்துடன் உற்பத்தி முறைமைகளினால் பொருளாதார, அரசியல் நடவடிக்கைகளின் வடிவங்களில் ஏற்படும் மாற்றங்களையும் குறிக்கப் பயன்படுத்தப்படுகின்றது.[20] இவ்வகையில் இலங்கையில் ஏற்பட்ட அபிவிருத்திகள் பன்மைச் சமூகங்கள் இடையிலான வேறுபாட்டை வளர்ச்சிப்படுத்தும் தன்மை கொண்டனவாகக் காணப்பட்டன. வெகுஜனங்களிடையே ஏற்பட்ட அரசியல் அசைவாக்கமானது இதுவரை அரசியலில் பங்கு பெறாத இன்னோர் புதிய பிரிவினரை அரசியல் நடவடிக்கைகளில் பங்குகொள்ள வைத்தது. முன்னர் அரசியல் நடவடிக்கைகளில் அதிக ஈடுபாடு கொண்டியங்கிய பிரிவினரிலும் பார்க்க வேறுபட்ட விருப்பங்களையும், நோக்கங்களையும், தேவைகளையும் கொண்டவர்களாக, இந்த அம்சங்களில் அவர்களுடன் பெருமளவு முரண்படுபவர்களாக இப்புதிய பிரிவினர் காணப்பட்டனர். இவர்கள் பழைய உயர்குழாத்தினரைப் பார்க்கிலும், கூடியளவு பழைமை வாதிகளாகவும், குறுகிய மனப்பாங்கு உடையவர்களாகவும் தம் அரசியல் நடவடிக்கைகளில் இன அடையாளங்களையும், உறுதிப்பாட்டையும் பயன்படுத்தியவர்களாகவும் விளங்கினர். இதன் விளைவாக அரசியற் கோரிக்கைகளும், பிரச்சினைகளும் இனவாதப் பண்பு கொண்டனவாக மாற்றம் பெற்றன.[21] இதனால் பன்மைச் சமூகங்களைக்

கொண்ட இலங்கையில் வெகுஜன அரசியல் அசைவாக்கத்தினால், இன, மத, மொழி உணர்வுகள் வளர்ச்சிப்பட்டு இன அடிப் படையிலான பிளவுகள் ஏற்பட்டன.

அண்மைத் தசாப்தங்களாக இலங்கை யில் நவீனமயமாக்கத்தினால் ஏற்பட்ட ஆழ மானதும், தெளிவானதுமான விளைவுகளில் ஒன்று இலங்கைக் குடித்தொகையின் பரந் தளவிலான பிரிவினர் விரைவாக அரசியல் மயப்படுத்தப்பட்டமையே ஆகும். 1931 இலிருந்து சர்வஜன வாக்குரிமை அளிக்கப் பட்டு இருந்தபோதும், பொதுப்பட அரசி யலில் மேலாதிக்கமுள்ளவராகச் சுதந்திரம் கிடைத்த பின்னரும்கூட விளங்கியவர்கள் மரபுகளின் அடிப்படையில் மரியாதைக்கு உரியவராக ஆதரவு பெற்று விளங்கிய சிறிய உயர்குழாத்தவரே. எழுத்தறிவு, கல்விப் பரவலாக்கம், அச்சுத்துறை அபிவிருத்தி, வெகுஜனத் தொடர்பு வசதிகள், தேர்தல் பிரசாரங்கள் இவைகள் எல்லாம் வெகு ஜனங்கள் பரந்தளவில் அரசியலில் ஈடுபடு வதற்கு வழிவகுத்தன. இவற்றின் விளை வாகச் சுதந்திரம் கிடைத்த ஒரு தசாப்தத் திற்குள்ளேயே பழைய மரபு வழிவந்த மரி யாதையை, தனிப்பட்ட செல்வாக்கை மையமாக வைத்து அரசியலில் முக்கிய பங் கேற்ற சிறு பிரிவினர் ஒதுக்கப்பட்டுப் புதிய பிரிவினர் அரசியலில் மேலாதிக்கம் பெற ஆரம்பிக்கின்றனர். வெகுஜனங்களின் அர சியல் விழிப்புணர்வினால் அவர்கள் சொந்த நலன்கள், விருப்புக்கள், தேவைகள் வாக் குரிமையுடன் இணைக்கப்பட்டதாக மாற் றம் பெற்றது. 1956 இன் பொதுத் தேர்த லும், அதில் இவர்களுக்குக் கிடைத்த வெற் றியும் இந்தப் புதிய போக்கை நன்கு எடுத் துக் காட்டுவதோடு, இதுவரை பேசப்பட்டு வந்த ஐக்கிய இலங்கை என்ற எண்ணக் கருவில் உடைவு ஏற்பட வழிவகுத்தது.

சிங்கள மக்களிடையே இன, மொழி, மத, அடிப்படையாக உருவாக்கப்பட்ட அசைவாக்கமானது இலங்கைத் தமிழர் பொறுத்து எதிர் விளைவான அசைவாக் கத்தை ஏற்படுத்தியது. சிறுபான்மையின ருக்கு இயல்பாகவே ஏற்படுகின்ற பெரும் பான்மையினர் மேலாதிக்கம், தம் தனித்து வம் குறைந்து ஒன்றிணைந்து விடுவோம் போன்ற அச்ச உணர்வுகள் இலங்கைத் தமிழரை முழுதாகத் தனித் தமிழ் அரசி யற் கட்சிகளுக்கே ஆதரவளிக்கும மனப் பாங்கு உடையவராக மாற்றிவிட்டன. அவ் வகையில் 1947 தேர்தலில் இருந்து தமிழ்க் காங்கிரசும், பின்னர் 1956 இலிருந்து தமி ழரசுக் கட்சியும் பிரதான தமிழர் அரசியற் கட்சியாக மாற்றம் பெற்றன. இன உணர்வு, பரஸ்பர சந்தேகங்களைக் கொண்டு உருவா கிய இன முரண்பாடுகள் தமிழ்ச் சமூகத் தில் அரசியல் அசைவாக்கத்தின் ஊக்கிகளா கச் செயற்படுவதனைக் காணலாம். 1956 இன் பின்பாக இடம்பெற்ற எல்லாப் பொதுத் தேர்தல்களிலுல் சமஷ்டிக்கட்சி இன உறவுகளை மையமாக வைத்தே தனது பரந்த ஆதரவைப் பெற்றுக் கொண்டது. 1972 இன் அரசியல் திட்டத்தில் சிங்களமே அரசகரும மொழி என்பது மீள் உறுதிசெய் யப்பட்டமையாலும், பௌத்த மதத்திற் குத் தனி முதன்மை அளிக்கப்பட்டமையா லும் சமஷ்டிக்கட்சி, இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் வேறு சில அமைப்புக்கள், தனிப் பட்டவர்கள் ஒன்றிணைந்து தமிழர் ஐக்கிய முன்னணி என்ற அமைப்பை உருவாக்கி னர். இந்நிலைமை தமிழ் மக்களது உறு திப்பாட்டையும், சிங்கள மேலாதிக்கத்திற்கு எதிரான ஒற்றுமை உணர்வையும் எடுத்துக் காட்டியதுடன், இனங்களுக்கிடையிலான அரசியல் இடைவெளியை மேலும் அதிகரிப் பதற்குக் காலாகவும் அமைந்தது. 1976 இல் தமிழர் ஐக்கிய முன்னணி வட்டுக் கோட்டைத் தீர்மானத்தை நிறைவேற்றித் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி என்று மாற்றம் பெற்று இன்னொரு காலப்பகுதிக் குள் செல்லலாயிற்று. பெரும்பான்மைச் சிங் கள மக்களின் அங்கோரத்திற்கான, இழந்த இழப்பீடுகளுக்கான கிளர்ச்சிகள் சிங்கள, பௌத்த பொது மக்களின் அரசியல் அசை வாக்கத்திற்குப் பங்களிப்புச் செய்ததைப் போலவே இலங்கைத் தமிழ் மக்களிடையே யும் சிங்கள மேலாதிக்கத்திற்கும் அடக்கு முறைக்கும் எதிராக இன, மொழி அடை

யாளங்களை வற்புறுத்தி வந்தமை அவர்களுடைய அரசியல் அசைவாக்கத்தில் பெரும் பங்கினை வகித்துள்ளது.[22]

இலங்கையில் நவீனமயமாக்கமும், சமூக, அரசியல் அசைவாக்கமும் ஒன்றிணைந்து இனவாத உணர்வினையும், அதன் அடிப்படையாகத் தேசிய இன உணர்வையும் வளர்ச்சிப்படுத்தியதுடன், குடித்தொகையின் பரந்த பிரிவினர் இடையே விரைவான அரசியல் அசைவாக்கத்திற்கும் வழிகோலியுள்ளது. பன்மைச் சமூகங்களின் பண்பாக இன அடையாளங்களை வற்புறுத்தும் தன்மை காணப்பட்டாலும், இது இனப் பிரிவுகளுக்கிடையே வேறுபாடுகளை வற்புறுத்தி இன, மொழி, ஒற்றுமை அடிப்படையிலான இரு வேறுபட்ட தேசியவாதங்களின் வளர்ச்சிக்கு வழிவகுத்தது. அரசியல் அசைவாக்கத்தின் விரைவான முன்னேற்றம் ஆழமான அரசியல் மீள் எழுச்சிக்கு வழிவகுத்த அதேசமயம் இலங்கையின் இன, மொழி, மதப் பிரிவினர் இடையிலான வேறுபாட்டினை மேலும் வலுவடையச் செய்தது.[23] இப்போக்கு இலங்கையின் தேசக்கட்டுமாணத்திற்கும், தேசிய ஒருங்கிணைப்பிற்கும் பாதகமான ஒன்றாகவே விளங்கியது.

1956 – 1972 இடையிலான காலப்பகுதியில் தொடர்ச்சியாகப் பதவிக்கு வந்த சிங்கள அரசாங்கங்களினால் மேற்கொள்ளப்பட்ட அரசியல், பொருளாதார, சமூக, கலாசார நடவடிக்கைகளின் விளைவாக இன, மொழிவாரித் தேசியவாதம் மேலும் வலுவடைந்து தேசக்கட்டுமானத்தை வலுவிழக்கச் செய்தது. சிங்கள, பௌத்த தேசியவாதம் பேரினவாதமாக மாற்றம்பெற அதற்கு ஈடுகொடுக்க வேண்டிய நிலையில் தமிழ்த் தேசியவாதமும் மாற்றமடைய வேண்டியதாயிற்று. தமிழ்மொழி, கலாசாரம் பொறுத்து அதிக ஈடுபாடு, தாம் வாழ்ந்த பாரம்பரியப் பிரதேசங்களில் ஏற்படுத்தப்பட்ட திட்டமிட்ட, அரச ஆதரவிலான சிங்களக் குடியேற்றங்கள், வேலைவாய்ப்புக்களில் புறக்கணிப்பு பாரப்பரியப் பிரதேசங்களின் பொருளாதார அபிவிருத்தி பொறுத்தும் பாரபட்சம், கல்வி, கைத்தொழில், வர்த்தகம், விவசாயத்துறைகளில் திட்டமிட்ட பாகுபாடு காட்டப்பட்டமை.[24] இவை அனைத்தும் தமிழ் மக்களின் கடும் எதிர்ப்பைப் பெற்றதுடன், சிங்கள மக்களுடன் ஒன்றிணைந்து வாழமுடியாத சூழ்நிலையை ஏற்படுத்தின. இலங்கைவாழ் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளுக்குச் சிங்கள மக்கள் பெருமளவு ஆதரவை வழங்கிவந்தனர். ஆசிய நாடுகளில் அந்நியர் ஆட்சிக்கு எதிராகத் தேசியவாதங்கள் வளர்ச்சி பெற்றது போல இலங்கையிலே பெரும்பான்மைச் சிங்கள இனத்தின் ஆட்சிக்கும், அடக்குமுறைமைக்கும் எதிராகத் தமிழ்த் தேசியவாதம் வளர்ச்சி பெற்றதெனலாம். இக்காலப்பகுதியில் சிங்கள பௌத்த தேசியவாதமானது சிங்கள மக்களின் பொருளாதார நலன்களை மேம்படுத்தும் பொருளாதாரத் தேசியவாதமாகவும் செயற்பட்டது. இதனால் இலங்கைத் தமிழ் மக்கள் கைத்தொழில், விவசாய, வர்த்தக, வேலைவாய்ப்புத் துறைகளிலே பாதிப்புக்கு உள்ளாக நேரிட்டது.[25]

இலங்கைத் தமிழ் மக்களின் தேசியக் கட்சியான தமிழரசுக்கட்சி 1956 – 1972 காலப்பகுதியில் சமஷ்டி அமைப்பு முறையின் கீழ் தம் பிரச்சினைகளை ஐக்கிய இலங்கைக்குள் தீர்த்துக் கொள்ளப் பாடுபட்டது. ஆனால் அதிகாரத்திலிருந்த பெரும்பான்மைச் சிங்களக் கட்சிகள் எல்லாமே தமிழ்த் தலைவர்களுடன் ஒப்பந்தங்கள் செய்வதனையும், அமுல்படுத்தாமல் கைவிடுவதனையும் வழக்கமாகக் கொண்டிருந்தன. இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதிலோ, சிறுபான்மையோர் என்ற அச்ச உணர்விற்கு மதிப்பளித்து நடப்பதிலோ, தேசிய நீரோட்டத்தில் அவர்கள் தனித்துவம் மாறாமல் அரவணைத்துச் செல்வதிலோ அக்கறை கொள்ளாதவர்களாகவே சிங்கள சமூகத்தவரும், அவர்கள் அரசியல் தலைவர்களும் நடந்து கொண்டனர். இத்துரதிஷ்டமான நிலைமை ஐக்கிய இலங்கை என்ற எண்ணக்கருவை சிதைவுறச் செய்ததாக அமைந்தது.

1972 இன் பின்பான காலப்பகுதி சிங்கள தமிழர் இன உறவுகள் பொறுத்தும், இனவாத நடவடிக்கைகள் பொறுத்தும், தேசக்கட்டுமாணம் பொறுத்தும் இன்னோர் கட்டத்தைக் குறித்துநிற்கின்றது. 1920-30 இல் இனவாரிப் பிரதிநிதித்துவம் கோரி, 1936-48 இல் சமபலப் பிரதிநிதித்துவமாக மாறி, 1948-56 இல் ஒத்துழைத்து நன்மை பெறுவதாக அமைந்து, 1956-72 இல் சமஷ்டிக் கோரிக்கையாக மாற்றமடைந்து, 1972 இன் பின்னர் தனிநாட்டுக் கோரிக்கையாகப் பரிணமித்தது. இந்த 50 வருட காலத்துள் தமிழ்மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதில் உண்மையான அக்கறை காட்டப்படாமல் இருந்ததுடன், படிப்படியாகத் தொடர்ச்சியான அடக்குமுறைக்கும் அவர்கள் உள்ளாக்கப்பட்டிருந்தனர். 1972 இன் பின்னர் தமிழ்ப் பிரதேசங்களில் பரவலான இராணுவ அடக்குமுறை மேற்கொள்ளப்பட்டது. ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் தமிழர் விரோத நடவடிக்கையினால் தனிநாட்டுக் கோரிக்கைக்கு ஆதரவு தமிழர்களிடையே பரவலாகக் காணப்பட்டது. தீவிரவாதத் தமிழ் இளைஞர்களும் பாராளுமன்றத் தேர்தல் மூலம் ஜனநாயக முறையில் தமிழர் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது என்று ஆயுதப் போராட்டத்தில் நம்பிக்கைவைக்க ஆரம்பித்தனர். இத்தகைய சூழலில்தான் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி 1977 இன் பொதுத் தேர்தலில் தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்துத் [illegible] மக்கள் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டது. சிங்கள, பௌத்த தேசியவாதத்தினால் வளர்த்தெடுக்கப்பட்ட தமிழ்த் தேசியவாதத்தின் ஒரு வளர்பருவ நிலையை இம்மக்கள் அங்கீகாரம் காட்டியதுடன் தேசக்கட்டுமாணம், தேசிய ஒருங்கிணைப்புப் பொறுத்து ஒரு தோல்விநிலையையும் வெளிப்படுத்தியது.

சுதந்திரத்தின் பின்பான இலங்கை வரலாற்றில் எத்துறையை எடுத்து நோக்கினும் இனவாதத்தின் செயற்பாடுகளை நன்கு அவதானிக்க முடிகின்றது. அரசியல், பொருளாதார, சமூக; கலாசாரத் துறைகளிலே இனவாதம் ஏற்படுத்திய தாக்கங்கள் இப்புதிய தேசிய அரசின் வளர்ச்சியிலே பல தடங்கல்களை ஏற்படுத்தியுள்ளன. முக்கியமாகத் தேசக்கட்டுமாணம், தேசிய ஒருங்கிணைப்பு, நவீனமயமாக்கம், அரசியல், சமூக அசைவாக்கம், அபிவிருத்தி போன்ற அம்சங்களின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு இனவாதமானது இடையூறாக விளங்கிவந்துள்ளது. இந்த அம்சங்கள் எல்லாம் பெரும்பான்மைச் சிங்கள மக்களுக்கே சொந்தமானவை அல்லது அவர்களுடன் மட்டுமே தொடர்புள்ளவை என்ற அர்த்தத்தில் ஆட்சியாளர்களினால் செயற்படுத்தப்பட்டு வந்துள்ளன. தேசக்கட்டுமாணம் தேசிய, ஒருங்கிணைப்பு, நவீனமயமாக்கம், அபிவிருத்தி போன்ற செயற்பாடுகள் எல்லாம் பெரும்பான்மைச் சிங்கள மக்களுடன் இணைக்கப்பட்டதுமல்லாமல், ஏனைய சிறுபான்மை இனங்கள் தங்களுடன் ஒன்றிணைதல் (Assimilation) வேண்டுமென்றும் அதுவே தேசக்கட்டுமாணம், தேசிய ஒருங்கிணைப்புக்கான வழி என்றும் தவறாகப் பெரும்பான்மையினத்தவரால் நம்பப்பட்டு வந்துள்ளது. அரசை மையப்படுத்திய, சிங்கள இனத்தை மையப்படுத்திய தேசக்கட்டுமாணமும் தேசிய ஒருங்கிணைப்பும் ஏனைய சிறுபான்மையின மக்களின் நலனையும், உரிமையையும், இருப்பையும் மறுதலிக்கும் பண்பு கொண்டனவாக விளங்கின. இப்பண்பு வேற்றுமையில் ஒற்றுமை காண்பது என்பதற்குப் பதிலாகப் பெரும்பான்மைச் சிங்கள இனத்திடம் ஏனைய சிறுபான்மை மக்கள் அரசியல், பொருளாதார, சமூக, கலாசார அடிப்படையில் ஒன்றிணைதல் என்ற கருத்தைக் கொண்டதாக இருந்தது. உபதேசிய வாதங்கள் இங்கு மறுக்கப்பட்டதுடன், அவை தேசகட்டுமாணத்திற்கும், தேசிய ஒருங்கிணைப்பிற்கும் குந்தகம் விளைவிக்கும் தன்மையானவை என்று ஆட்சியாளரால் கருதப்பட்டன. சமத்துவம், சமநீதி, சுதந்திரம் என்பவைகளுக்கு மாறானவைகளாக, ஓரினத்தின் மேலாதிக்கத்திற்கு வழிவகுக்கும் நடவடிக்கைகளாக இப்புதிய அரசின் ஆட்சியாளர்களின் கொள்கைகள், நடவடிக்கைகள் கடந்த ஐந்து தசாப்தங்களாக அமைந்துள்

ளன. உண்மையில் இச் செயற்பாடுகள் தேசக்கட்டுமானம், தேசிய ஒருங்கிணைப் பிற்கு மாறான சக்திகளை வலுப்படுத்தி தேசிய உடைவிற்கு வழிவகுக்கும் தன்மை கொண்டனவாகவே காணப்படுகின்றன.[26] (Nation - building or Nation breaking) இன்று இலங்கையில் நாம் காணும் துர்ப் பாக்கிய நிலைமை இதுவரை சிங்கள ஆட் சியாளர்களினால் கடைப்பிடிக்கப்பட்ட கொள்கைகளின், அமுலாக்கத்தின் தோல் வியை மிகச் சிறப்பாக எடுத்துக்காட்டுகின் றது. எவ்வளவோ இழப்புக்களின் பின்னர் இனியாகிலும் உண்மையான தேசக்கட்டு மாணம், தேசிய ஒருங்கிணைப்பை இந்நாட் டில் ஏற்படுத்த ஆட்சியாளர் நடவடிக்கை களை துணிந்து மேற்கொள்ளல் வேண்டும். இம் முயற்சியில் தவறின் நாடு பிளவுபடுவ தைத் தவிர வேறு வழியே இல்லாமல் போய்விடும். □

## அடிக்குறிப்புக்கள்


1. Robert N. Kearney, *Communalism and Language in the Politics of Ceylon.* Duke University Press, Durham NC, 1967, P. 5.

2. D. E. Smith, (ed) *South Asian Politics and Religion,* Princeton, 1966, P. 9

3. Clifford Geertz, "The Integrative Revolution: Primordial Sentiments and Civil Politics in the New States" in Clifford Geertz (ed.) *Old Socie - ties and New, States,* Free Press of Glencoe, New York, PP. 105 - 157.

4. Myron Weiner, "Political Integration and Political Development", in J. L. Finkale and R. W. Gable (eds.) *Political Development and Social Change,* New York, 1971, PP. 643 - 45.

5. James Manor, "The Dynamics of Political Integration and Disintegration" in A. Jayaratnam Wilson and Dennis Dalton (eds.), *The State of South Asia: Problem of National Integration,* Vikas Publishing House, New Delhi, 1982, P. 89.

6. M. Roberts, 'Foundations of Sinhala and Tamil Nationalism and Some Implications' *Ceylon Studies Seminar* 1973. See for example.

7. James Manor, *F. N.* 5, P. 92.

8. James Manor, 'The Failure of Political Integration in Sri Lanka' (Ceylon) *The Journal of Commonwealth & Comparative Politics* Vol. XVII, No. 1, March 1979, PP. 21 - 46.

9. Ibid,

01. Iqbal Narain, 'Cultural Pluralism, National Integration and Democracy', *Asian Survey* Vol. XVI, No. 10, Oct. 1976, P. 913.

11. D. G. Morrison and H. M. Stevenson, 'Integration and Instablity', *American Political Science Review* LXVI, Sept. 1972, P. 903.

12. Arthu G. Rubinoff, 'Integration Theories and the Case of Goa', in *National Unity - South Asian Experience* (ed.) Milton Israel, Promila & Co., Delhi, 1983, P. 3.

13. Madan L. Handa, 'National Unity Social Justice and Education - The Indian Experience,' in *National Unity South Asian Experience* (ed.) Milton Istreal, New Delhi, 1983, PP. 47 - 76.

14. Myron Weiner, 'Political Integration and Political Development,' *The Annals of the American Academy of Politics and Social Sciences*, No. 358, March 1965, PP. 53 - 54.

Robert P. Van den Helm, 'Aspects of the Study of State Formation and Nation - Building', *International Journal of Politics* IV (Spring - Summer 1974, PP. 3 - 39.

15. S. J. Tambiah. *Sri Lanka: Ethnic Fratricide and the Dismantling of Democracy*. Oxford University Press, 1986, p.27, (Hindustan Times, 4. 1. 1987).

16. Urmila Phadnis, "Ethnicity and Nation - Building in South Asia." *South Asian Studies*, Vol. 14, Nos. 1 &2. Jaipur, Jan-Dec 1979, p. 80.

17. Ibid., p.92; Asaf Hussain, 'Ethnicity, National Identity and Praetorianism," *Asian Survey*, Vol. 16. No 10, Oct 1976, p. 918

18. Madan L. Handa, *F. N. 13*.

19. Ibid,, pp. 55-57.

20. Robert N. Kearney, 'South and South - east Asia: A Regional Survey- Modernization and Political Developmeut' in R. N. Kearney (ed.) *Politics and Modernization in South and Southeast Asia*, Cambridge Mass, 1975, P. 3.

21. Robert N. Kearney, 'Nationalism, Modernization and Political Mobilization in a Plural Society, in *Collective Identities, Nationalism and Protest in Modern Sri Lanka* (ed.), M. Robert. Colombo, 1974, P. 453.

22. Ibid., P. 459.

23. S. U. Kodikara, 'Communalism and Political Modernization in Ceylon', *Modern Ceylon Studies*, University of Ceylon, Vol. I, No. I, 1970, PP. 94 - 114.

24. C. R. de Silva, 'Sinhalese - Tamil Rift in Sri Lanka, in *The States of South Asia: Problems of National Integration* op; acit. P. 161.

25. *பார்க்க: ச. சத்தியசீலன், இலங்கை இனப்பிரச்சினையின் பொருளாதார மூலங்கள், பாரதி பதிப்பகம், யாழ்ப்பாணம், 1994.*

26. A. Jayaratnam Wilson, *The Break up of Sri Lanka: The Sinhala-Tamil Conflict*, C. Hurse & Co, London, 1988.

N. Balakrishnan, Some Issues of a Divided Polity in Sri Lanka', in *Presidential Addresses 1992*, Proceedings of Jaffna Science Association, Jaffna, 1993.

Urnila Phadnis, *Ethnicity and Nation - building in South Asia*, Sage Publications New Delhi, 1989.